கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 21.10.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலை அதிகாரிகளுக்கு ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் உற்பத்தி பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிர் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கும் வேளாண் பூச்சியியல் துறையில், தோட்டக்கலை அதிகாரிகளுக்கு ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த ஒரு நாள் பயிற்சி 18.10.2024 அன்று வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு முறையில் உயிரியல் முறை பூச்சி கட்டுப்பாடு என்பது ஒரு வகையான பூச்சி கட்டுப்பாடு முறையாகும். அதாவது பயிர்களை தாக்கக் கூடிய பூச்சிகளை இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணி மற்றும் இரை விழுங்கியை பயன்படுத்தி கட்டுப் படுத்துவதாகும். தீங்கு விளைவிக்க கூடிய பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை குறைப்பதற்காக நன்மை செய்யும் பூச்சிகளை பயன்படுத்தி பயிர்களை சேதத்தில் இருந்து பாதுகாக்கலாம். குறிப்பாக, தென்னையை தாக்கக் கூடிய பூச்சிகளுக்கான இயற்கை எதிரிகள் மற்றும் மரவள்ளி மாவுப்பூச்சிக்கான ஒட்டுண்ணி குறித்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்த தோட்டக்கலை அதிகாரிகளுக்கு, பூச்சியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா. முருகன் அவர்கள் இப்பயிற்சியினை துவக்கி வைத்தார்.

பயிர்களை தாக்கக் கூடிய பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் மற்றும் அதனை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ஞா.ப்ரீதா, அவர்கள் விளக்கமளித்தார். இதனைத் தொடர்ந்து இயற்கை எதிரிகளை வளர்க்க பயன்படுத்தப்படும் நெல் அந்துப்பூச்சியின் உற்பத்தி குறித்து பூச்சியியல் துறை பேராசிரியர், முனைவர். ஏ.சு.ஜான்சன் தங்கராஜ் எட்வர்ட் அவர்கள் விளக்கமளித்து நெல் அந்துப்பூச்சி பெருக்கம் செய்யும் ஆய்வகத்தையும் பார்வையிட்டனர்.

பின்னர் பூச்சியியல் துறையின் ஒட்டுண்ணி உற்பத்தி ஆய்வகத்தில் தென்னையை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தக் கூடிய ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்யும் செயல் முறை பயிற்சி வழங்கப்பட்டது. தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் இரைவிழுங்கிகளின் உற்பத்திமுறைகளை பூச்சியியல்துறை உதவி பேராசிரியர். முனைவர் மு.அழகர் விளக்கமளித்து செய்முறை பயிற்சியும் வழங்கினார். அதனைத் தொடர்ந்து பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பெ.அ.சரவணன், அவர்கள் மரவள்ளியை தாக்கும் மாவுப்பூச்சி மற்றும் அதனை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி உற்பத்தி குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியின் முடிவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன் அவர்களும், பயிர்ப்பாதுகாப்பு இயக்கத்தின் இயக்குனர் முனைவர் மூ.சாந்தி அவர்களும் கலந்துக் கொண்டு தோட்டக்கலை அதிகாரிகளுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கினர். இப்பயிற்சியில் 25 தோட்டக்கலை அதிகாரிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**